TNTP010036192023

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**திருச்சிராப்பள்ளி**

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 08–ம் நாள் திங்கட்கிழமை

**அமர்வு வழக்கு எண்.160/2023**
**CNR.No. TNTP01–003619–2023**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>காட்டுப்புத்தூர் காவல் நிலையம்<br>குற்ற எண்.204/2021 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், தந்தை பெயர் மற்றும் முகவரி | | **எதிரிகளின் முகவரி**<br><br>1. சுப்பிரமணியன் த/பெ ராமசாமி,<br>143, காந்திசாலை மேற்கு,<br>சுள்ளிப்பாளையம்,<br>உன்னியூர், தொட்டியம் வட்டம்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br><br>2. நல்லம்மாள் க/பெ சுப்பிரமணியன்,<br>சுள்ளிப்பாளையம்,<br>உன்னியூர், தொட்டியம் வட்டம்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |

| | | |
|---|---|---|
| | | 3. செல்வராஜ் த/பெ சுப்பிரமணியன், சுள்ளிப்பாளையம், தொட்டியம் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| சம்பவ நாள் | | 07.06.2021 |
| புகார் நாள் | | 10.06.2021 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | | A1 – 10.06.2021<br>A2 – 29.09.2021<br>A3 – Anticipatory Bail (27.10.2021) |
| எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | 1 வது மற்றும் 3 வது எதிரிகளின் மீது இதச பிரிவு 294(b), 302, 323, 506(2)ன் கீழும், 2 வது எதிரியின் மீது இதச பிரிவு 294(b), 302, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதிலுரை | & | குற்றவாளிகள் இல்லை. |
| தண்டனை அல்லது உத்தரவு | & | அரசு தரப்பானது 1 வது மற்றும் 3 வது எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 294(b), 302, 323, 506(2)ன் கீழும், 2 வது எதிரிக்கு எதிராக இதச பிரிவு 294(b), 302, 506(2)ன் கீழும் இந்த வழக்கை முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என முடிவு செய்து 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் தீர்மானித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். |

| | | |
|---|---|---|
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சா.பொ.1 முதல் சா.பொ.2 மற்றும் சா.பொ.4 முதல் சா.பொ.6 வரை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. தடய அறிவியல் துறை மற்றும் மருத்துவ துறை சம்பந்தப்பட்ட கருத்து மற்றும் நிபுண ஆவணங்களை குற்றவியல் நடைமுறை விதிகள் சட்டம் 2019 விதி : 264 உள்ள சரத்து படி அந்த அந்த துறையினருக்கு அனுப்பி வைக்க தலைமை எழுத்தருக்கு உத்தரவிடுகிறேன். இவ்வழக்கில் சா.பொ.3 ஆக உள்ள TN 28 AQ 0682 பதிவு எண் கொண்ட TVS XL SUPER இருசக்கர வாகனத்தை இன்றிலிருந்து 6 மாதத்திற்குள் அதன் உரிமையாளர் கேட்கும் பொழுது ஒப்படைத்துவிட வேண்டும் இல்லை எனில் கு.வி.மு.ச பிரிவு 458ன் கீழ் சட்ட முறைப்படி அதை அரசு ஆதாயம் செய்து விட வேண்டும். |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து **08.06.2026** தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை

வழக்கறிஞர் **திரு.A.பாலசுப்பிரமணியன்,** அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.T.சேதுராஜன்** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது **மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தொட்டியத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.20/2022** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல் விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.

**இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –**

அரசு தரப்பு வழக்கானது, கடந்த 07.06.2021ம் தேதி 1வது மற்றும் 2வது எதிரிகள் செல்லப்பனுக்கு சொந்தமான இடத்தில் இருந்த மாட்டு தீவனத்தை ஒரு பாத்தி அளவிற்கு அறுத்துக்கொண்டு சென்றுவிட்டதை மறுநாள் பார்த்த செல்லப்பன் அவர்களிடம் இது பற்றி கேட்டதற்கு அவர்கள் எதுவும் சொல்லாமல் சென்றுள்ளனர். அதன் பின்னர் கடந்த 09.06.2021ம் தேதி காலையிலும் செல்லப்பன் தனது தோட்டத்துக்கு சென்று பார்த்தபோது, மேலும் ஒரு பாத்தி மாட்டு

தீவனத்தை முதலாவது மற்றும் இரண்டாவது எதிரிகள் அறுத்துக்கொண்டு போய் இருப்பதை பார்த்த தனது வயலில் இருந்த செல்லப்பன் அதே தினம் மாலை சுமார் 6.00 மணியளவில் 1 வது மற்றும் 2 வது எதிரிகளிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு நாங்க அப்படிதாண்டர் பயலே தேவடியா பயலே முடிந்ததை பார்த்துக்கொள் என்று  மிரட்டி கொண்டு இருந்த போது அங்கு டிவிஎஸ் பதிவு எண் T.N28–AQ–0682 ல் அங்கு வந்த 3 வது எதிரி செல்வராஜ் அரிவாளுடன் அங்கு வந்து, இந்த நாதாரி பையனை வெட்டிக்கொன்றால் தான் நமக்கு நிம்மதி இத்தோட தொலஞ்சு போட தேவிடியா மகனே என்று சொல்லிக்கொண்டு ஓடி வந்து செல்லப்பனின் உச்சந்தலையில் ஓங்கி வெட்டி மரண காயத்தை ஏற்படுத்தி உள்ளார்.

அப்போது 1 வது எதிரி சுப்பிரமணியன் தான் வைத்திருந்த கடப்பாறை கம்பியால் செத்துப்போடா என்று சொல்லி செல்லப்பனின் இடது காலில் ஓங்கி அடித்து மரண காயத்தை ஏற்படுத்தி உள்ளார். 2 வது எதிரி நல்லம்மாள் செல்லப்பனை பார்த்து எங்களிடம் கேள்வி கேட்டால், இது தான் உனக்கு கதி இதோட செத்துப்போ என்று கூறி தன் கையில் வைத்திருந்த தடியால் செல்லப்பனின் நெஞ்சு மற்றும் காலில் ஓங்கி அடித்து காயங்களை ஏற்படுத்தி உள்ளார். இதைப் பார்த்து தடுக்க வந்த சாட்சி சுப்ரமணியை 1 வது மற்றும் 3 வது எதிரிகள் தங்களை தடுக்க வந்தால் உன்னை கொன்றுவிடுவோம் என்று சொல்லி அவரை கையால் அடித்து உள்ளார்கள்.

அதன் பின்னர் சாட்சிகள் அங்கு ஓடி வருவதை பார்த்து எதிரிகள் மூன்று பேரும் தங்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி என்னிக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம், என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள் மரண காயங்கள் பட்ட செல்லப்பன் நாமக்கல் தங்கம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும், அதன் பின்னர் மாருதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீட்டில் இருந்து வந்தவர் தனக்கு ஏற்பட்ட மரண காயங்களின் விளைவாக உடலின் உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக நாமக்கல் அரசு மருத்துவமனையில் கடந்த 06.07.2021 ஆம் தேதி சுமார் 8.25 மணிக்கு இறந்து போய்விட்டார். எனவே 1 மற்றும் 3 வது எதிரிகள் சட்டப்பிரிவுகள் 294(b), 323, 302 மற்றும் 506(2) இந்திய தண்டணைச் சட்டத்தின் கீழும், 2 வது எதிரி சட்டப்பிரிவுகள் 302, 506(2) இந்திய தண்டணைச் சட்டத்தின் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது தொட்டியம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை நாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது **முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 20/2022** ஆக **மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தொட்டியத்தில்** கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும்

கு.வி.மு.ச.207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது 1 மற்றும் 3 வது எதிரிகள் சட்டப்பிரிவுகள் 294(b), 323, 302 மற்றும் 506(2) இதச பிரிவின் கீழும், 2 வது எதிரி சட்டப்பிரிவுகள் 302, 506(2) இதச பிரிவின் படியான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.160/2023 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் கு.வி.மு.ச பிரிவு 226 ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் கு.வி.மு.ச பிரிவு 227 உ/இ பிரிவு 228 ன் படி 1 வது மற்றும் 3 வது எதிரிகளின் மீது 294(b), 302, 323, 506(2)ன் கீழும், 2 வது எதிரியின் மீது 294(b), 302, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

4. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரிகளிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார்கள். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி **அ.சா.1** முதல் **அ.சா.19** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.த.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.27** மற்றும் **சா.பொ.1** முதல் **சா.பொ.6** குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:**

6.1) அ.சா.1 சுப்ரமணி தனது சாட்சியத்தில் நான் தொட்டியம் தாலுகா, பெரியபள்ளிபாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது காட்டில் இருந்து 75 மீட்டர் அப்பால் செல்லப்பனுக்கும். சுப்ரமணியனுக்கும் வயல் இருந்தது. செல்லப்பனும், சுப்ரமணியனும் அண்ணன் தம்பிகள். ஆஜர் எதிரிகளை தெரியும். 2 வது எதிரி மனைவி, 3 வது எதிரி மகன் ஆவார்கள். செல்லப்பன் குடும்பத்திற்கும். ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும் தண்ணீர் பாய்ச்சுவதில் மற்றும் தீவனம் அறுப்பதில் பிரச்சனைகள் வரும்.

கடந்த 09.06.2021 ம் வருடம் மாலை சுமார் 05.50 மணி முதல் 06.00 மணி வரை வயலில் இருந்தேன். என்னுடைய வயலில் இருந்தேன். அப்பொழுது செல்லப்பனை செல்வராஜ் என்பவர் துரத்தி கொண்டு வந்தார். 3 வது எதிரி. செல்லப்பனை வெட்டி கொல்ல போவதாக சொன்னார். அடுத்த சில மணியில் செல்லப்பனை அருவாளால் செல்வராஜ் நடு மண்டையில் வெட்டி விட்டார். உடனே

1வது எதிரி சுப்ரமணி கடப்பாறையால் செல்லப்பனை காலில் அடித்துவிட்டார். 2 வது எதிரி நல்லம்மாளும் உடனே வந்து கட்டையால் செல்லப்பனை நெஞ்சிலும், காலிலும் அடித்துவிட்டார்.

எதிரிகள் மூவரும் செல்லப்பனை அடிக்கும் பொழுது ஏன் இங்கு வந்து சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டேன். சம்பவம் எங்கள் வயற்காட்டில் தான் நடந்தது. அப்பொழுது நான் இங்கு வந்து அடித்து கொள்ளாதீர்கள் என்று சொன்னேன். அதற்கு என்னை 1வது மற்றும் 3 வது எதிரியும் என்னை கீழே தள்ளிவிட்டனர். உடனே அந்த இடத்தில் சதீஸ், பெரியசாமி, சிவ் ஆகியோர் அந்த இடத்திற்கு வந்தனர். உடனே ஆஜர் எதிரிகள் வண்டியை எடுத்து கொண்டு அந்த இடத்தில் இருந்து ஓடிவிட்டனர்.

எதிரிகள் செல்லப்பனை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி வண்டியை எடுத்து சென்றுவிட்டனர். சதீஸ் என்பவர் செல்லப்பனை ரோட்டிற்கு அழைத்து வந்து ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாருதி மருத்துவமனைக்கு எடுத்து சென்றனர். அங்கு சிகிச்சைக்கு பின்னர் மீண்டும் ஊருக்கு வந்துவிட்டார். பின்பு நாமக்கல் அரசு 06.07.2021 வருடம் மீண்டும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு போகும் வழியில் அவர் இறந்துவிட்டார்.

செல்வராஜ் வைத்து இருந்த அருவாள் மரக்கைப்பிடி போட்ட அருவாள். அது சுமார் 1.5 அடி இருக்கும். கடப்பாரை சுமார் 3 அடி இருக்கும். நல்லம்மாள் வைத்து இருந்த சவுக்கு கட்டை 2 அடி

இருக்கும். தற்பொழுது காண்பிக்கப்படும் அருவாளை வைத்து 3 வது எதிரி செல்லப்பனை வெட்டவில்லை. அது வேற அருவாள். தற்பொழுது காண்பிக்கப்படும் இரும்பு கடப்பாரை வைத்து தான் 2 வது எதிரி செல்லப்பனை தாக்கினார். அது சா.பொ.1 ஆகும். தற்பொழுது காண்பிக்கப்படும் கட்டையை வைத்து தான் 3 வது எதிரி. செல்லப்பனை காலிலும், நெஞ்சிலும் அடித்தார். அது சா.பொ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். இரண்டு முறை விசாரித்தார்கள். 3 வது முறை நீதிமன்றத்தில் வாக்குமூலம் வாங்கினார்கள்.

தற்பொழுது சொன்ன மாதிரி தான் நீதிபதியிடமும் வாக்குமூலம் அளித்தேன். முசிறி நீதிமன்றத்தில் நீதிபதி ஒருவர் விசாரித்தார். நான் வாக்குமூலம் கொடுக்கும் போது நீதிமன்றத்தில் இருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டுவிட்டனர். நான், நீதிபதி, டைப் செய்பவர், வக்கில் இருந்தார். வக்கில் இருந்தாரா என சரியாக ஞாபகம் இல்லை. நான் சாட்சியம் கொடுக்கும் பொழுது நீதிமன்ற கதவுகள் அடைக்கப்பட்டுவிட்டன. நான் சாட்சி சொல்வதை நீதிபதி கேட்டு அதை டைப்பிஷ்ட் மூலம் பதிவு செய்தார். நான் சொன்னது எல்லாம் அதில் எழுதி இருந்தது. தற்பொழுது காண்பிக்கப்படும் வாக்குமூலம் தான் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். அந்த கையெழுத்துக்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.3 ஆகும். நான்கு வருடம் ஆகியதால் எனக்கு சரியாக ஞாபகமில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 பெரியசாமி தனது சாட்சியத்தில் நான் உன்னியூர் அருகே உள்ள சுள்ளிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன செல்லப்பனை உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி சுப்ரமணியனும், இறந்த செல்லப்பனும் அண்ணன்–தம்பி ஆவார்கள். அவர்களுக்குள் சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். கடந்த 09.06.2021–ம் தேதி மாலை 06.00 மணியளவில் சுப்ரமணி மற்றும் செல்லப்பன் ஆகியோர் தோட்டத்திற்கு அருகில் வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஆள்கள் சண்டை போடும் சத்தம் கேட்டது. கிழக்கு பக்கம் கேட்டது.

நான் பார்த்தபொழுது செல்லப்பன் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். நான் போய் அருகில் சென்று பார்த்தேன். அப்பொழுது அ.சா.1 அங்கு நின்று கொண்டிருந்தார். நான் அருகில் சென்று செல்லப்பனிடம் என்ன என்று கேட்டேன். என் அண்ணன் குடும்பத்தினர் என்னை அடித்துவிட்டு போய்விட்டதாக சொன்னார். அதன் பின்னிட்டு சிவக்குமார், சதீஸ் என்பவர் அந்த இடத்திற்கு வந்தார்கள். சதீஸ் ஆம்புலன்சிற்கு போன் செய்து செல்லப்பனை தங்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

அங்கு சிகிச்சை பெற்று கொண்டு செல்லப்பன் வீட்டிற்கு வந்துவிட்டார். பின்பு 06.07.2021–ம் தேதி செல்லப்பனுக்கு பிரச்சனை என்று மீண்டும் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அவர் போகிற வழியிலேயே இறந்துவிட்டதாக

சொன்னார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள். முசிறி நீதிபதியும் என்னை 30.07.2021 அன்று விசாரித்தார். அதன் பின்னிட்டு காவல் துறையினர் என்னை விசாரித்தனர் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 சதீஸ் தனது சாட்சியத்தில் நான் தற்போது திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், உன்னியூர் சுள்ளிபாளையத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் வியாபாரம் மற்றும் விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்துபோன செல்லப்பனை எனக்கு தெரியும். அவர் என்னுடைய பக்கத்து தோட்டத்து உரிமையாளர். கடந்த 09.06.2021-ம் தேதி அன்று மாலை 06.00 மணிக்கு நான் என் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டாரை இயக்குவதற்காக சென்றேன். 1-வது எதிரி சுப்பிரமணியன் தோட்டத்தில் ஒரு நான்கு நபர்கள் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள்.

செல்வராஜ் என்பவர் அருவாள் வைத்திருந்தார். 1-வது எதிரி சுப்பிரமணியன் கடப்பாறை வைத்திருந்தார். 3-வது எதிரி நல்லம்மாள் கையில் உருட்டு கட்டை வைத்திருந்தார். செல்வராஜை நேரில் பார்த்தால் நான் அடையாளம் சொல்வேன். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர்தான். என்னை பார்த்தவுடன் செல்லப்பனை பார்த்து எதிரிகள் மிரட்டிவிட்டு பைக்கை எடுத்துவிட்டு சென்றார்கள். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். 1-வது எதிரி சுப்பிரமணியன் கடப்பாறையை எடுத்து செல்லப்பனின் கால் பகுதியில் அடித்தார். செல்வராஜ் அருவாளால் செல்லப்பனின் தலையின் நடுபகுதியில் வெட்டினார்.

நல்லம்மாள் உருட்டு கட்டையால் செல்லப்பனின் நெஞ்சில் அடித்தார். நான் சென்று பார்த்தவுடன் அவர் ரத்தத்தோடு கீழே கிடந்தார். நான் ஆம்புலன்சிற்கு போன் செய்தேன். நாமக்கல் மாவட்டத்தில் இருந்து ஆம்புலன்ஸ் வந்து செல்லப்பனை எடுத்து சென்று மாருதி மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் உடன் சென்றேன். திருப்பூரிலிருந்து செல்லப்பனின் மகன் ரமேஷ் மருத்துவமனைக்கு வந்தார். மேல்சிகிச்சைக்காக செல்லப்பனை தங்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக மறுநாள் தெரிந்து கொண்டேன். செல்லப்பன் 06.07.2021 அன்று இறந்துவிட்டதாக தகவல் வந்தது. நுரையீரலில் உருட்டு கட்டையால் தாக்கும்போது காயம் ஏற்பட்டிருந்ததாக தெரிந்து கொண்டேன்.

சம்பவத்தின்போது செல்லப்பன் லுங்கி கட்டியிருந்தார். எதிரிகளும் லுங்கி கட்டியிருந்தார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள். முசிறி நீதிமன்றத்தில் ஒருமுறை என்னை நீதிபதி விசாரித்தார். அருவாள் முக்கால் கை அளவுக்கு இருந்தது. கைப்பிடி பக்கம் வளைந்து இருந்தது. கடப்பாறை சுமார் 2 அடி இருக்கும். உருட்டு கட்டை சுமார் 2 முதல் 2 1/2 அடி இருக்கும். எதிரிகள் சென்ற டிவிஎஸ் எக்சல் இரு சக்கர வாகனம் அனைவரும் பயன்படுத்தகூடிய வாகனம்போல் இருந்தது. அது பச்சை கலர். தற்பொழுது போட்டோவில் காணப்படும் வண்டிதான் எதிரிகள் சென்ற வண்டி. அது **சா.பொ.3** ஆகும்.

நான் முசிறி நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். நான்

இங்கு சொன்ன சங்கதியைத்தான் நீதிபதியிடமும் சொன்னேன். என்னை தனியாக நீதிமன்றத்தில் வைத்து விசாரித்தார்கள். தட்டச்சர் இருந்தார். நீதிமன்ற அறை மூடப்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார். நான் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து **அ.த.சா.ஆ.4** ஆகும். நான் கொடுத்த வாக்குமூலத்தில் நான் சொன்ன சங்கதிகளை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். தற்பொழுது காண்பிக்கப்படும் அருவாளை வைத்துதான் எதிரி செல்வராஜ் செல்லப்பனின் தலையில் வெட்டினார். அந்த அருவாள் **சா.பொ.4** ஆகும் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 ரமேஷ் தனது சாட்சியத்தில் நான் தற்போது தொட்டியம் தாலுகா, உன்னியூரில் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூரில் வேலை பார்த்து வருகிறேன். என்னுடைய அம்மா, அப்பா, குடும்பத்தினர் சுள்ளிபாளையத்தில் குடியிருந்து வருகிறார்கள். இறந்துபோன செல்லப்பன் எனது அப்பா. 1வது எதிரி சுப்பிரமணியன் எனது பெரியப்பா. 2வது எதிரி நல்லம்மாள் எனது பெரியம்மா. 3வது எதிரி செல்வராஜ் எனது அண்ணன் முறை.

எங்கள் குடும்பத்தினருக்கு பூர்வீக சொத்து 2.8 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தை 12 வருடங்களுக்கு முன்பாக என்னுடைய அப்பாவும், ஆஜர் 1–வது எதிரி பெரியப்பாவும் சரிசமமாக பிரித்து கொண்டார்கள். எங்கள் நிலத்தில் நாங்கள் மாட்டு தீவனம் வளர்த்து வந்தோம். அதேபோல் எதிரிகள் நிலத்திலும் மாட்டு தீவனம் வளர்த்து வந்தார்கள். எங்களுக்கு சொந்தமான வயலில் உள்ள மாட்டு

தீவனத்தை எங்களுக்கு தெரியாமல் எதிரிகள் குடும்பத்தினர் அறுத்து வந்தனர்.

கடந்த 09.06.2021-ம் தேதி மாலை 05.45 - 06.00 மணியளவில் எனது அப்பா எதிரிகளிடம் சென்று ஏன் என்னுடைய வயலில் உள்ள மாட்டு தீவனத்தை அறுக்குறீர்கள் என்று கேட்டார். அப்போது அவர்களுக்குள் வாக்குவாதம் நடந்துள்ளது. அப்பொழுது 3-வது எதிரி செல்வராஜ் சூப்பர் எக்சல் டிஎன்28 கியூ 0682 என்ற வாகனத்தில் வந்தார். அவர் எனது அப்பாவை அடிப்பதற்காக துரத்தினார்.

எங்கள் தோட்டத்திற்கு அருகில் உள்ள நல்லியா கவுண்டர் மகன் சுப்பிரமணியன் தோட்டத்திற்கு அருகில் ஆடு வளர்ப்பதற்காக ஒரு கொட்டகை போட்டுள்ளனர். 3-வது எதிரி செல்வராஜ் என் அப்பாவை துரத்தி கொண்டு போய் அருவாளால் நடு மண்டையில் வெட்டிவிட்டார். எனது அப்பா கீழே விழுந்துவிட்டார். பின்னடியே சென்ற 2 மற்றும் 1-வது எதிரிகள் 1-வது எதிரி கடப்பாறையால் எனது அப்பாவின் இடது காலில் அடித்துவிட்டார். 2-வது எதிரி நல்லம்மாள் உருட்டு கட்டையால் எனது அப்பாவின் நெஞ்சு பகுதியில் அடித்துவிட்டார்.

அப்பொழுது அங்கு இருந்த நல்லியா கவுண்டர் மகன் சுப்பிரமணியன் தடுக்க சென்றார். அப்பொழுது 1-வது எதிரி சுப்பிரமணியனும், 3-வது எதிரி செல்வராஜும் அவரை அடித்து கீழே தள்ளிவிட்டனர். எங்கள் ஊரை சேர்ந்த சதீஸ்குமார், சிவக்குமார்,

பெரியசாமி மூன்று பேர்களும் அந்த வழியாக சென்றுள்ளனர். இந்த சத்தத்தை பார்த்து அந்த இடத்திற்கு மேற்படி மூவரும் ஓடி வந்தனர். அப்பொழுது 3–வது எதிரி செல்வராஜ் எனது அப்பாவை பார்த்து இதோடு செத்துபோடா என்று சொல்லிவிட்டு அங்கிருந்த எக்ஸல் இரு சக்கர வாகனத்தில் ஏறி மூன்று எதிரிகளும் தப்பித்து ஓடிவிட்டனர்.

அங்கிருந்த சதீஸ் என்பவர் ஆம்புலன்ஸ் வரவழைத்து எனது அப்பாவை நாமக்கல்லில் உள்ள மாருதி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அப்பொழுதுதான் நான் சென்று மருத்துவமனையில் எனது அப்பாவை பார்த்து என்ன நடந்தது என்று விசாரித்தபோது மேற்கண்ட விபரங்களை எனது அப்பா என்னிடம் சொன்னார். அதன் பிறகு அங்கு எனது அப்பாவை பரிசோதித்த மருத்துவர் நெஞ்சிலும், தலையிலும் அதிகமாக காயம் இருப்பதால் இங்கு சிகிச்சை அளிக்க முடியாததால் நாமக்கல்லில் உள்ள தங்கம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தோம். அங்கு 12 நாட்கள் சிகிச்சை முடிந்து எனது அப்பா வீட்டிற்கு வந்துவிட்டார். இது சம்பந்தமாக எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்.

அதன் பின்பு கடந்த 06.07.2021–ம் தேதி மாலை 07.30 மணியளவில் எனது அப்பாவிற்கு நெஞ்சு மற்றும் தலை வலி இருப்பதாக நாமக்கல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர் எனது அப்பா வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார். அதன் பின்பு 30.07.2021–ம் தேதி முசிறி நீதித்துறை நடுவரிடம் வழக்கு சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தோம்.

அதை நீதித்துறை நடுவர் பதிவு செய்தார். அதில் நான் கையெழுத்து செய்தேன். அப்பொழுது நீதிமன்ற கதவுகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. தட்டச்சர் செய்பவர் மட்டும் நீதிமன்றத்தில் இருந்தார். அந்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.5) அ.சா.5 ராசம்மாள் தனது சாட்சியத்தில் நான் தற்போது தொட்டியம் தாலுகாவில் சுள்ளிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன செல்லப்பன் எனது கணவர். ஆஜர் 1–வது எதிரி சுப்பிரமணியன் எனது அக்காவின் கணவர். 2–வது எதிரி எனது அக்கா. எங்கள் பூர்வீக சொத்து 2.80 ஏக்கர் இருந்தது. அதில் எங்கள் குடும்பத்தினரும், எதிரிகள் குடும்பத்தினரும் சரிசமமாக பிரித்து கொண்டு தனித்தனியாக விவசாயம் செய்து கொண்டு வந்தோம்.

கடந்த 09.06.2021–ம் வருடம் எங்கள் வயலில் இருந்த மாட்டு தீவனத்தை எங்கள் அக்கா வீட்டில் அறுத்துவிட்டனர். இது சம்பந்தமாக எனது கணவர் எங்களது அக்கா கணவரிடம் கேட்டார். அப்பொழுது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. 3–வது எதிரி செல்வராஜ் என்பவர் வண்டியில் வந்தபொழுது நல்லி கவுண்டர் மகன் சுப்பிரமணியன் தோட்டத்திற்கு அருகில் அருவாளால் எனது கணவரை வெட்டினார். 1–வது எதிரி சுப்பிரமணியன் கடப்பாறையால் எனது கணவரின் காலில் அடித்துவிட்டார். 2–வது எதிரி நல்லம்மாள் உருட்டு கட்டையால் எனது கணவரின் நெஞ்சில் அடித்துவிட்டார். இதை

பார்த்த நல்லி கவுண்டர் மகன் சுப்பிரமணியன் தடுத்தார். அவரை 1–வது எதிரியும், 3–வது எதிரியும் அடித்து கீழே தள்ளிவிட்டனர்.

அந்த நேரத்தில் சதீஸ், பெரியசாமி, சிவகுமார் ஆகியோர் அந்த இடத்திற்கு வந்தனர். அவர்கள் சம்பவத்தை பார்த்துவிட்டு ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டனர். அப்பொழுது 3 வது எதிரி செல்வராஜ் என்பவர் உன்னை இத்தோடு கொன்று விட வேண்டும் என்று சொல்லிவிட்டு வண்டியை எடுத்து கொண்டு மூன்று பேரும் சென்றுவிட்டனர். பின்னிட்டு எனக்கு தகவல் கிடைத்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்குபோய் எனது கணவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அவர் அனத்தி கொண்டே சம்பவத்தை பற்றி சொன்னார்.

அப்பொழுது சிவகுமார் மற்றும் அங்கு இருந்தவர்கள் எல்லாம் சேர்ந்து ஆம்புலன்ஸ் வரவழைத்து நாமக்கல்லில் உள்ள மாருதி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அப்பொழுது அங்கு பரிசோதித்த மருத்துவர் எனது கணவருக்கு நெஞ்சிலும் தலையிலும் காயம் இருப்பதாக சொல்லி மேல்சிகிச்சைக்காக தங்கம் மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தோம். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 15 நாட்கள் கழித்து எனது கணவர் வீட்டிற்கு வந்து இருந்தார்.

மீண்டும் 06.07.2021–ம் தேதி மாலை சுமார் 05.30 மணிக்கு மேல் எனது கணவர் நெஞ்சு மற்றும் தலை வலிப்பதாக சொன்னார். நாங்கள் உடனே எனது கணவரை கார் மூலம் நாமக்கல்லில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது கணவரை

பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார். மருத்துவரிடம் எதனால் எனது கணவர் இறந்தார் என்று கேட்டேன். அதற்கு அவர் தலையிலும், நெஞ்சிலும் ஏற்பட்ட காயத்தினால் இறந்துவிட்டதாக கூறினார்.

இது சம்பந்தமாக 30.07.2021–ம் தேதி நீதித்துறை நடுவர், முசிறி அவர்களிடம் வாக்குமூலம் கொடுத்தேன். நடந்த விவரத்தை நீதித்துறை நடுவரிடம் சொன்னேன். அவர் அதை தட்டச்சு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் கையெழுத்துதான் நீதித்துறை நடுவர் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து. அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.6** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.6) அ.சா.6 ஆனந்த் தனது சாட்சியத்தில் நான் தற்போது தொட்டியம் தாலுகா, சுள்ளிபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் தனியார் நிறுவனத்தில் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறேன். இறந்துபோன செல்லப்பன் என்னுடைய தந்தை. வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். 1–வது எதிரி எனது பெரியப்பா. 2–வது எதிரி எனது பெரியம்மா. செல்வராஜ் எனக்கு அண்ணன் முறை வேண்டும்.

கடந்த 09.06.2021–ம் தேதி நான் சென்னையில் இருந்தேன். அப்போது சதீஸ்குமார் எனக்கு போன் செய்தார். போன் செய்து உங்களுடைய அப்பாவை உங்கள் பெரியப்பா, பெரியம்மா,

பெரியப்பா மகன் அடித்துவிட்டார்கள் என்று சொன்னார். உடனே நான் அங்கிருந்து ஊருக்கு வந்துவிட்டேன். எனது அப்பாவை நாமக்கல் மாருதி மருத்துவமனையில் அனுமதித்திருந்தார்கள். அங்கு சென்று நான் பார்த்தேன். என் அப்பாவிடம் என்ன நடந்தது என்று நான் கேட்டேன். நடந்த சம்பவத்தை சொன்னார். நெஞ்சிலும், தலையிலும் பலமாக அடிப்பட்டிருந்ததால் மேல் சிகிச்சைக்காக நாமக்கல்லில் உள்ள தங்கம் மருத்துவமனையில் எனது அண்ணன் சேர்த்தார். 10, 12 நாட்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

கடந்த 06.07.2021 அன்று நெஞ்சு வலிப்பதாக சொன்னார். எனது அம்மா, பக்கத்தில் இருந்தவர்கள் சேர்ந்து நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு மருத்துவர்கள் எனது அப்பாவை பரிசோதித்தபோது அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.7) அ.சா.10 சுப்பிரமணி த/பெ செல்லப்பன் தனது சாட்சியத்தில் நான் தற்போது தொட்டியம் தாலுகா, சுள்ளிபாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். இறந்த செல்லப்பனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். செல்லப்பனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் வயலில் வரப்பு பிரச்சனை இருந்து வந்தது. இதனால் அடிக்கடி தகராறு வந்து கொண்டிருந்தது. கடந்த 09.06.2021–ம் தேதி ஆஜர் எதிரிகள் செல்லப்பனை அடித்துவிட்டதாக சொன்னார்கள். நான் செல்லப்பனை மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன்.

செல்லப்பனுக்கு கட்டு போட்டு மருத்துவமனையில் இருந்தார். மீண்டும் செல்லப்பனுக்கு 06.07.2021–ம் தேதி உடம்பு சரியில்லாமல் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றார். அன்று மாலை 07.00 மணியளவில் செல்லப்பன் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.8) அ.சா.11 சுப்பிரமணியன் த/பெ பெரியசாமி தனது சாட்சியத்தில் நான் தற்போது தொட்டியம் தாலுகா, சுள்ளியம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். இறந்த செல்லப்பனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். செல்லப்பனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடம் சம்பந்தமாக அடிக்கடி தகராறு வந்து கொண்டிருந்தது. கடந்த 09.06.2021–ம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. அடிபட்ட செல்லப்பனை நானும், மற்றவர்களும் நாமக்கலம் தங்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதன் பின்பு அரசு மருத்துவமனையில் சேர்ந்தார். சிகிச்சை முடிந்து செல்லப்பன் வீட்டிற்கு வந்தார்.

பின்பு ஒரு மாதம் கழித்து செல்லப்பனுக்கு உடம்பு சரியில்லை என நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றார். போகும் வழியிலேயே செல்லப்பன் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.9) அ.சா.12 மருத்துவர் பழனிவேல் தனது சாட்சியத்தில் நான் தற்போது நாமக்கல் மாருதி மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 09.06.2021 அன்று இரவு 08.00 மணியளவில் சுமார் 50 வயதுடைய செல்லப்பன் என்பவரை ரமேஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். செல்லப்பனை அவருக்கு தெரிந்த மூன்று நபர்கள் உன்னியூர் என்ற ஊரில் செல்லப்பன் தோட்டத்தில் இரும்பு கம்பியாலும், மரக்கட்டையாலும் அடித்து தாக்கியதாக செல்லப்பன் கூறினார்.

அவருக்கு பின்வரும் தென்பட்டன. மேற்படி செல்லப்பன் காயங்கள் சுயநினைவோடும், சொல்வதை புரிந்து கொள்ளும் நிலையிலும் இருந்தார்.

1. தலையில் இடது பக்கத்தில் 7 × 2 X 2 செ.மீ நீளத்தில் கிழிந்த காயம் (parietal scalp) மத்தியில் தென்பட்டது.

2. மார்பகத்தில் இடது புறம் வீக்க காயம் காணப்பட்டது.

3. இடது காலில் முழங்கால் எலும்பு முறிவு ஏற்பட்டது

4. இடது காலில் 7 × 2 X 2 செ.மீ அளவில் கிழிந்த காயம் இருந்தது. இந்த காயம் மூன்றாவது காயத்திற்கு அருகில் தென்பட்டது.

காயம் 1 மற்றும் 4 சாதாரண காயங்கள் என்றும். காயம் 2 மற்றும் 3 கொடுங்காயங்கள் என்றும் நான் கொடுத்த சான்றிதழ் கொடுத்தேன். செல்லப்பன் என்பவருக்கான விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.7 ஆகும். நான் கொடுத்த காயச்சான்று அ.த.சா.ஆ.8 ஆகும்.

அவருடைய தலைக்கான சிடி ஸ்கேன் அறிக்கையின் படி அவருடைய மூளையில் பாதிப்புகள் எதுவும் இல்லை என தெரிந்தது.

மார்பகத்தில் 4–வது விலா எலும்பில் முறிவு காணப்பட்டது. வலது நுரையீரல் வீங்கி இருந்தது. இடது நுரையீரல் அடிபட்டு சுருங்கி இருந்தது. 4–வது விலா எலும்புக்கு கீழ் பகுதியில் தான் நுரையீரல் அமைந்துள்ளது. என்னை போலீசார் விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.10) அ.சா.13 பழனிசாமி தனது சாட்சியத்தில் நான் தற்போது தொட்டியம் தாலுகாவில் உள்ள சுள்ளியம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2021–ம் வருடம் காலை சுமார் 11.00 மணிக்கு என்னுடைய வயலில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். காட்டுபுத்தூர் போலீசார் என்னை அழைத்தனர். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். கொண்டிருந்தார்கள். சுப்பிரமணியன் தோட்டத்தில் விசாரித்து படம் வரைந்து கையெழுத்து கேட்டார்கள். அந்த இடத்தில் பச்சை கலர் துண்டு,அரக்கு மட்டை (தென்னை மட்டை) ஒன்றை போலீசார் எடுத்தனர். தற்பொழுது காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.9 ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து அல்ல. போலீசார் உங்கள் முன்பு படம் வரைந்து அந்த இடத்தை குறித்து கொண்டார்கள் என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.11) அ.சா.14 மருத்துவர் குழந்தைவேல் தனது சாட்சியத்தில் நான் தற்போது நாமக்கல் மாவட்டம், தங்கம் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.06.2021–ம் ஆண்டு இரவு 11.40 மணியளவில் நாமக்கல் மாவட்டம், மாருதி மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சைக்காக வந்த செல்லப்பன் என்பவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரை அவரது மகன் ரமேஷ் அழைத்து வந்தார்.

அவர் கடந்த 09.06.2021 அன்று மாலை 05.00 மணியளவில் 3 தெரிந்த நபர்களால் இரும்பு ராடு (கடப்பாறை) கொண்டு தாக்கியதாகவும், அந்த தாக்குதல் அவரது தோட்டத்தில் நடந்ததாகவும் அவரே சொன்னார். அவரை நான் பரிசோதனை செய்யும் பொழுது அவர் சுயநினைவில் இருந்தார். தனக்கு நெஞ்சு வலிப்பதாக கூறினார். அவருடைய தலை மற்றும் கால் காயத்திற்கு மாருதி மருத்துவமனையில் ஏற்கனவே முதலுதவி செய்யப்பட்டு எம்எல்சி வழக்காக இருந்துள்ளது. நெஞ்சில் ஏற்பட்ட காயத்திற்காக எங்கள் மருத்துவமனைக்கு வந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது தலையில் 4 X 2 X 1 செ.மீ அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

2. நெஞ்சில் இடது பக்கத்தில் மார்பு காம்புக்கு அருகில் பல்வேறு அளவில் சிராய்ப்பு காயங்களும், ரத்தகட்டும் காணப்பட்டது.

3. இடது தொடையில் இருந்து கீழ் பகுதி வரை மாவுக்கட்டு போட்டு சிகிச்சைக்கு வந்தார்.

அவருக்கு நெஞ்சு பகுதியில் சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அவரது இடது நுரையீரலில் சுருங்கியும், காற்று கட்டி கொண்டும் காணப்பட்டது. மற்ற நுரையீரல் பாகங்களில் ரத்த கசிவு தென்பட்டது.

4. நான்காவது விலா எலும்பு உடைந்து காணப்பட்டது.

5. கால் பகுதியில் எக்ஸ்ரே எடுக்கப்பட்டிருந்தது. அதில் டிபியா என்ற எலும்பில் மேல் பகுதியிலும், கீழ் பகுதியிலும் 2 எலும்பு முறிவுகள் தென்பட்டன.

அவருக்கு ஏற்பட்ட காயங்களில் தலையில் சிடி ஸ்கேன் எடுக்கும் பொழுது சீராக இருந்தது. தலை காயத்தை தவிர மற்ற காயங்கள் அனைத்தும் கொடுங்காயங்கள் ஆகும். அவர் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். அதன் பிறகு அவர் மருத்துவ சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்டார். எங்களிடம் அவர் சிகிச்சைக்கு வந்த காரணம் இடது நுரையீரல் பகுதியில் Intercostal Drainage மூலம் சிகிச்சைக்காக வந்தார். நுரையீரலில் இருந்த காற்று வெளியே எடுக்கப்பட்டது. சுருங்கியிருந்த நுரையீரல் இயல்பு நிலைக்கு வந்தது. அந்த நுரையீரல் செயற்கை குழாயை எடுத்துவிட்டு 14.06.2021 அன்று நாங்கள் மாருதி மருத்துவமனைக்கே அவரை மேல் சிகிச்சைக்காக

அனுப்பி வைத்தோம். நான் கொடுத்த காயச்சான்று **அ.த.சா.ஆ.10** ஆகும் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.12) அ.சா.15 வேலுசாமி தனது சாட்சியத்தில் நான் தற்போது தொட்டியம் தாலுகாவில் உள்ள சுள்ளிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 09.06.2021–ம் வருடம் நானும், எனது மாமா இறந்துபோன சுப்ரமணியும் மோட்டாரில் தண்ணீர் எடுப்பதற்காக நானும் சென்றேன். அப்பொழுது மணி சுமார் 04.00 மணி இருக்கும். அன்றைய தினமே மாலை 06.00 மணியளவில் எனது மகளை ஸ்கூலில் இருந்து அழைத்து வருவதற்காக பேருந்து நிலையம் சென்றேன்.

10.06.2021–ம் தேதி காவல் துறையினர் அடிபட்ட இடத்தில் கம்பியும், வண்டியும் கிடந்ததாக சொல்லி என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.11** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.12** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.13) அ.சா.16 அரசு மருத்துவர் ஹேமலதா தனது சாட்சியத்தில் நான் தற்போது நாமக்கல் மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனையில் மனநல துறையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.07.2023 அன்று பணியில் மேற்படி

மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த பொழுது இரவு சுமார் 08.25 மணி அளவில் செல்லப்பன் வயது 55, என்பவரை இறந்த நிலையில் அவரது உறவினர் சதீஸ்குமார் என்பவர் கொண்டு வந்தார்.

அவரது பிரேதத்தினை பிரேத பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி வைத்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்தேன். செல்லப்பனுக்கான விபத்து பதிவேட்டு நகல் **அ.த.சா.ஆ.13** ஆகும் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.14) அ.சா.17 சசிகலா காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்போது கரூர் மாவட்டம், பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 10.06.2021–ம் தேதி திருச்சி மாவட்டம், காட்டுபுத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்த பொழுது நாமக்கல் தங்கம் தனியார் மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற மருத்துவ தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராமசாமி மகன் செல்லப்பன் என்பவரை விசாரித்தேன்.

அவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 10.06.2021–ம் தேதி காலை 10.00 மணியளவில் காட்டுபுத்தூர் காவல் நிலைய குற்ற எண்.204/2021 இதச பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். என்னால் எழுதப்பட்ட புகார் **அ.த.சா.ஆ.14** (எதிரிகள் தரப்பில் கடும் ஆட்சேபனை செய்யப்பட்டது பதிவு செய்யப்பட்டது). அதன்படி நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.15** ஆகும்.

முதல் தகவல் அறிக்கையை திருச்சி மாவட்டம், முசிறி நீதித்துறை நடுவர் மன்றத்திற்கு அசலை அனுப்பி வைத்து அதன் நகலை தொட்டியம் வட்ட காவல் ஆய்வாளருக்கு மேல் விசாரணைக்காக அனுப்பி வைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.15) அ.சா.18 அரசு மருத்துவர் சிவானந்தம் தனது சாட்சியத்தில் நான் தற்போது அரசு நாமக்கல் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் அதே துறையில் மருத்துவ கல்லூரியானது நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்ந்து பணியாற்றிய பொழுது கடந்த 07.07.2021–ம் தேதி அன்று மதியம் 01.00 மணியளவில் காட்டுபுத்தூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் கிரேடு–2 பிசி 1690 திரு.கருணாநிதி என்பவர் மூலம் திரு.செல்லப்பன் த/பெ.ராமசாமி வயது 55/2021 என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அறிக்கை வழங்குமாறு காட்டுப்புத்தூர் காவல் நிலைய குற்ற எண்.204/2021, சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(ii) இதச தேதி 10.06.2021 மேலும் 07.07.2021–ம் தேதி அன்று 302 இதசவிற்கு மாற்றம் செய்யப்பட்ட வேண்டுகோள் கடிதத்துடன் என்னை அனுகிறார்.

நான் மேற்கண்ட பிரேதத்தை மருத்துவ ஆவணங்களின் மூலம் அடையாளம் கண்டு 07.07.2021 அன்று மதியம் 01.10 மணிக்கு உடற்கூறாய்வு ஆரம்பித்து நிறைவு செய்தேன். பிரேதத்தின் மீது கண்ட

உடற்கூறு ஆய்வுக்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் மற்றும் உடற்கூறாய்வின் பொழுது நான் கண்ட சங்கதிகள் அனைத்தையும் எனது அறிக்கையில் விரிவாக பதிவு செய்துள்ளேன். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.16** ஆகும். எனது இறுதி கருத்துரை **அ.த.சா.ஆ.17** ஆகும்.

உடற்கூறு ஆய்வு செய்ததில் இறந்த நபர் அவர் உடம்பில் பல உறுப்புகள் செயல் இழந்ததன் காரணமாக மரணம் ஏற்பட்டிருக்கலாம் என இறுதி கருத்துரை கொடுத்தேன். என்னை போலீசார் விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.16) அ.சா.19 மோகன்ராஜ் காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்போது காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 10.06.2021–ம் தேதி தொட்டியம் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது காட்டுபுத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சசிகலா என்பவர் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை குற்ற எண்.204/2021 வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக பெற்று கொண்டேன்.

சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்பு தயார் செய்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.18**. வரைபடம் **அ.த.சா.ஆ.19**. பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் ரத்தம் படிந்த பச்சை நிற துண்டு **சா.பொ.5**, ரத்தம் படிந்த தென்னை ஓலை **சா.பொ.6** ஆகியவற்றை கைப்பற்றியதற்கான மகஜர் **அ.த.சா.ஆ.20** ஆகும். 1–வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அவரை கைது செய்த பின் அவர் கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில் கடப்பாறை, அருவாள், சவுக்கு கட்டை (2 அடி), டிவிஎஸ் எக்ஸ்சல் சூப்பர் இரு சக்கர வாகனம் ஆகியவற்றை கைப்பற்றியதற்கான மகஜர் **அ.த.சா.ஆ.21** ஆகும்.

கைப்பற்றிய பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அதற்கான படிவங்கள் **அ.த.சா.ஆ.22 மற்றும் அ.த.சா.ஆ.23** ஆகும். கடந்த 06.07.2021–ம் தேதி வழக்கில் காயம்பட்ட நபர் செல்லப்பன் என்பவர் இறந்துவிட்டதால் இந்த வழக்கை இதச பிரிவு 302–யை சேர்த்து மாற்றி அமைத்த அறிக்கை **அ.த.சா.ஆ.24** ஆகும். பின்பு இறந்த செல்லப்பன் மீது செய்த பிரேத விசாரணைக்கான அறிக்கை **அ.த.சா.ஆ.25** ஆகும். பின்பு அவரது பிரேதத்தை உடற்கூறாய்வுக்கு அனுப்பி வைப்பதற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.26** ஆகும்.

பின்பு மருத்துவ சாட்சிகள் மற்றும் தடய ஆய்வக சாட்சிகள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.09.2021–ம் தேதி 2–வது எதிரி நல்லம்மாள் காவல் நிலையத்தில் சரணடைந்தவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 20.09.2021–ம் தேதி 1 மற்றும் 3 எதிரிகளுக்கு 294(பி), 323, 302 மற்றும் 506(2) இதசவின் படியும், 2–வது எதிரிக்கு 302, 506(2) இதச வின் படி சட்டப்பிரிவு மாறுதல் செய்து 294(பி), 323, 302, 506(2) இதசவின் படி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.27** ஆகும்.

பின்பு எனது வழக்கின் விசாரணையை முடித்து 29.09.2021–ம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரிகள் மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் எழுத்துமூலமான வாத உரை தாக்கல் செய்யப்பட்டது நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அவர்கள் சுட்டிக்காட்டிய முன்தீர்ப்புரைகளும் வழக்கு சங்கதிகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.

**<u>தீர்வு:–</u>**

இந்த வழக்கில் புகார் கொடுத்தவர் திரு.செல்லப்பன் என்ற நபர் ஆவார். அவர் புகார் கொடுத்த தேதி 10.06.2021. அவர் புகார் கொடுத்த பிறகு 06.07.2021ம் தேதியன்று இறந்துவிட்டார். அவர் புகார் கொடுத்த தேதியில் இருந்து சுமார் 26 நாட்கள் கழித்து இறந்துள்ளார். அவரிடம் கு.வி.மு.ச பிரிவு 161(3)ன் கீழ் வாக்குமூலம் பதிவு

செய்யப்பட்ட நாள் 10.06.2021 ஆகும். அவர் சிகிச்சை முதலில் எடுத்து கொண்ட மருத்துவமனை நாமக்கல் தங்கம் மருத்துவமனை. இரண்டாவதாக சிகிச்சை எடுத்து கொண்ட மருத்துவமனை மாருதி மருத்துவமனை. அவர் அந்த மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாள் 19.06.2021.

பின்னர் 06.07.2021ம் தேதி இரவு சுமார் 08.25 மணிக்கு நாமக்கல் அரசு மருத்துவமனையில் இறந்த நிலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் ஒரு நாள் சிகிச்சையில் இருந்தார். அவர் இறந்த தேதி 06.07.2021 ஆகும். அவர் காயம் அடைந்ததாக சொல்லும் தேதிக்கும் அவர் இறந்துவிட்டதாக சொன்ன தேதிக்கும் இடையே உள்ள நாட்கள் 27 ஆகும். புகார் கொடுத்தவர் கொடுத்ததாக சொல்லும் புகாரில் அவருடைய கையெழுத்து இல்லை. அவரிடம் வாக்குமூலம் வாங்கியதாக அ.சா.17 திருமதி.சசிகலா உதவி காவல் ஆய்வாளர் அவர்கள் குறுக்கு விசாரணையின் பொழுது புகார்தாரின் கையெழுத்து பெறவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

மேற்படி புகார்தாரரின் வாக்குமூலத்தை பதிவு செய்த புலன் விசாரணை அதிகாரி அந்த வாக்குமூலத்தை 14.06.2021 அன்று தான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். இந்த வழக்கு சம்பந்தமாக 1வது எதிரி சுப்பிரமணியன் 14.06.2021 அன்று தான் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். புகாரை பெற்ற நாள் 10.06.2021. சம்பவம் நடந்ததாக சொல்லும் நாள் 09.06.2021. இந்த வழக்கில் புகாரில் புகார்தாரரின் கையெழுத்து இல்லாதது புகார்

வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மை தான் என்பதை எந்த ஒரு சராசரி ஞானம் உள்ள மனிதன் நம்ப மாட்டான்.

பட்டியல் சாட்சி 1 சம்பந்தமாக முதன் முதலாக பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் தேதி மற்றும் மாதம் திருத்தப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 1ன் மறு வாக்குமூலம் 09.07.2021 அன்று நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை புகார் கொடுத்ததாக சொல்லப்படும் செல்லப்பனின் கையெழுத்து இல்லை மற்றும் அந்த முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிய தேதி குறிப்பிடப்படவில்லை. புகார் கொடுத்தவர் 26 நாட்கள் கழித்து சம்பவத்திற்கு பிறகு இறந்துள்ளார். அதற்கு இடையில் சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டு தனது வீட்டிற்கும் வந்துள்ளார். பட்டியல் சாட்சி 1 னிடம் வாக்குமூலம் பெற்ற புலன் விசாரணை அதிகாரி ஏன் 26 நாட்களாக இறந்துபோன செல்லப்பனிடம் வாக்குமூலம் பெறவில்லை என்பதை கவனிக்கும் பொழுது அரசு தரப்பின் அடிப்படை கட்டமைப்பே உடைந்துவிட்டதாக தெரியவருகிறது.

இந்த வழக்கில் அரசு தரப்பில் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை சட்டப்படி நிரூபணம் செய்யப்படவில்லை. நீதித்துறை நடுவர் முசிறி முன்பு அ.சா.1 னிடம் ஒரு வாக்குமூலம் கு.வி.மு.ச பிரிவு 164 ன் கீழ் பதிவு செய்யப்பட்டது. அந்த வாக்குமூலம் பதிவு செய்த நாள் 30.07.2021. இந்த வழக்குமூலமும் மிகவும் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 தனது சாட்சியத்தில் ஒவ்வொரு எதிரிக்கான செயல்களை மாற்றி மாற்றி சொல்லியுள்ளார். 3 வது எதிரி செல்வராஜ் அருவாளால் செல்லப்பனை தலையில் தாக்கியதாக

சொல்லியுள்ளார். ஆனால் செல்லப்பனை பயன்படுத்தியதாக சொல்லப்படும் கடப்பாறை சா.பொ.1 என முற்றிலும் மாறாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட அருவாளை வைத்து 3 வது எதிரி செல்வராஜ் செல்லப்பனை தாக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார். இவர் சாட்சியம் முற்றிலும் முரண்பட்டதாக உள்ளது.

அ.சா.2 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. அ.சா.3 சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியம் சொல்லியுள்ளார். ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில் சம்பவம் நடந்த பிறகு தான் அ.சா.3 சம்பவ இடத்திற்கு வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இவர் சாட்சியமும் நம்பும்படி இல்லை. அ.சா.4, அ.சா.5, அ.சா.6, அ.சா.11 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை.

அ.சா.12 தனது சாட்சியத்தில் 09.06.2021 அன்று நாமக்கல் மாருதி மருத்துவமனையில் இரவு 08.00 மணிக்கு செல்லப்பனை மருத்துவ பரிசோதனை செய்து பதிவு செய்த விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா.ஆ.8. செல்லப்பன் உடம்பில் காணப்பட்ட காயத்திற்கும் அவருடைய நுரையீரலில் காணப்பட்ட காயத்திற்கும் நேரடியாக தொடர்பு இருப்பதாக சொல்லவில்லை. இவர் சாட்சியம் அரசு தரப்பிற்கு சாதகமாக இல்லை. அ.சா.13 தனது சாட்சியத்தில் போலீசார் சம்பவ இடத்தில் எந்த தேதி எந்த மாதம் விசாரித்தார்கள் என சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.14 தனது சாட்சியத்தில் நாமக்கல் தங்கம் மருத்துவமனையில் 09.06.2021 அன்று இரவு 11.40 மணிக்கு செல்லப்பனை என்பவரை விசாரித்து கொடுத்த

காயச்சான்று அ.த.சா.ஆ.10 ஆகும். இவர் மூலம் செல்லப்பனுக்கு காயம் உண்டானது தெரியவருகிறது. ஆனால் யார் அதை ஏற்படுத்தினார்கள் என தெரியவில்லை.

அ.சா.16 நாமக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் 06.07.2021 இரவு 08.25 அன்று செல்லப்பனை மருத்துவமனையில் அனுமதித்து கொடுத்த விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.13 ஆகும். அ.சா.17 இந்த வழக்கில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.14 ஆகும். இவர் தங்கம் மருத்துவமனையில் செல்லப்பனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த சார்பு ஆய்வாளர். புகார் வாக்குமூலத்தில் புகார்தாரரின் கையெழுத்து இல்லாத சூழ்நிலையில் அங்கு மருத்துவமனையில் செல்லப்பனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் நல்ல மனநிலையில் செல்லப்பன் இருக்கிறாரா என கேட்டு சான்றிதழ் பெறவில்லை. புகாரில் எழுதப்பட்ட எழுத்துக்களுக்கும் அந்த புகாரை பதிவு செய்து எழுதப்பட்ட எழுத்துக்களுக்கும் எழுதியவர்கள் வெவ்வேறு நபர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆக புகாரை யார் எழுதியது புகாரை யார் பதிவு செய்தது என சந்தேகம் எழுகிறது. இவர் தரப்பு சாட்சியம் அரசு தரப்பிற்கு சாதகமாக இல்லை.

அ.சா.18 இவ்வழக்கில் தனது சாட்சியத்தில் இறந்து போன செல்லப்பன் பிரேதத்தின் மீது உடற்கூறு ஆய்வு செய்த அறிக்கை அ.த.சா.ஆ.16 இறுதி அறிக்கை அ.த.சா.ஆ.17 ஆகும். இவர் செல்லப்பனின் மரணம் பல உறுப்புகள் செயல் இழந்ததால் அதன் காரணமாக மரணம் ஏற்பட்டு இருக்கலாம் என சான்று கொடுத்துள்ளார்.

09.06.2021 அன்று செல்லப்பன் உடம்பில் ஏற்பட்ட காயத்திற்கும் மரணத்திற்கும் நேரடியாக தொடர்பு இருக்கிறது என இந்த சாட்சியத்தின் மூலம் எதுவும் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை.

அ.சா.19 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி. இவர் சம்பவ இடத்தில் இரத்தம் படிந்த தடயங்கள் எதுவும் சேகரிக்கவில்லை. இவர் இந்த வழக்கை செல்லப்பனின் மரணத்திற்கு பிறகு கொலை வழக்காக மாற்றியுள்ளார். இவர் சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக சொல்லும் கடப்பாறை, அருவாள், சவுக்கு கட்டை ஆகியவற்றை தடய ஆய்விற்கு உட்படுத்தவில்லை. செல்லப்பன் உயிருடன் இருக்கும் பொழுது அவரிடம் புலன் விசாரணை சம்பந்தமாக எந்த வாக்குமூலமும் பதிவு செய்த இவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. விசாரணை வாக்குமூலங்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு சென்றுள்ளது. செல்லப்பனிடம் மரண வாக்குமூலம் எடுக்க இவர் எந்த முயற்சியும் செய்யவில்லை. எந்த எந்த இடத்தில் இருந்து தடய பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்பது பற்றி குறிப்பிட்டு பார்வை மகஜரிலோ, வரைபடத்திலோ அல்லது கைப்பற்றுதல் மகஜரிலோ சொல்லவில்லை. செல்லப்பன் சம்பவத்தின் போது அணிந்து இருந்ததாக சொல்லப்படும் இரத்தம் படிந்த ஆடைகள் எதுவும் கைப்பற்றவில்லை. இவர் புலன் விசாரணை நம்பும் படி இல்லை. குறிப்பாக சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் பச்சை நிற துண்டு யாருக்கு சொந்தமானது அதில் கண்ட இரத்தம் யாருடையது என்பது பற்றி அறிந்து கொள்ள தடய ஆய்வு எதுவும் செய்யவில்லை.

இந்த வழக்கில் செல்லப்பன் கொடுத்ததாக சொல்லும் வாக்குமூலத்தில் செல்லப்பனின் கையெழுத்து அல்லது கைரேகை பெறாமல் இருந்து இருப்பது புலன் விசாரணை இயந்திரத்தனமாக நடந்துள்ளதை காட்டுகிறது. அதையும் புலன் விசாரணை அதிகாரி கவனிக்காமல் இருப்பதை கவனிக்கும் பொழுது புலன் விசாரணை யார் செய்தார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அரசு தரப்பு முற்றிலும் நம்பும் படி இல்லை.

__முடிவாக,__

அரசு தரப்பானது 1 வது மற்றும் 3 வது எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 294(b), 302, 323, 506(2)ன் கீழும், 2 வது எதிரிக்கு எதிராக இதச பிரிவு 294(b), 302, 506(2)ன் கீழும் இந்த வழக்கை முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என முடிவு செய்து 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் தீர்மானித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன்.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சா.பொ.1 முதல் சா.பொ.2 மற்றும் சா.பொ.4 முதல் சா.பொ.6 வரை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. தடய அறிவியல் துறை மற்றும் மருத்துவ துறை சம்பந்தப்பட்ட கருத்து மற்றும் நிபுண ஆவணங்களை குற்றவியல் நடைமுறை விதிகள் சட்டம் 2019 விதி : 264 உள்ள சரத்து படி அந்த அந்த துறையினருக்கு அனுப்பி வைக்க தலைமை எழுத்தருக்கு உத்தரவிடுகிறேன். இவ்வழக்கில் சா.பொ.3 ஆக உள்ள TN 28 AQ 0682 பதிவு எண் கொண்ட TVS XL SUPER இருசக்கர வாகனத்தை இன்றிலிருந்து 6 மாதத்திற்குள் அதன்

உரிமையாளர் கேட்கும் பொழுது ஒப்படைத்துவிட வேண்டும், இல்லை எனில் கு.வி.மு.ச பிரிவு 458 ன் கீழ் சட்ட முறைப்படி அதை அரசு ஆதாயம் செய்து விட வேண்டும்.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2026–ம் வருடம் ஜூன் மாதம் 08** ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 08.06.2026

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | சுப்பிரமணி |
| அ.சா.2 | பெரியசாமி |
| அ.சா.3 | சதீஸ் |
| அ.சா.4 | ரமேஷ் |
| அ.சா.5 | ராசம்மாள் |
| அ.சா.6 | ஆனந்த் |
| அ.சா.7 | ரமேஷ் |
| அ.சா.8 | ராஜேந்திரன் |
| அ.சா.9 | ராமசாமி |
| அ.சா.10 | சுப்பிரமணி த/பெ செல்லப்பன் |
| அ.சா.11 | சுப்பிரமணியன் த/பெ பெரியசாமி |
| அ.சா.12 | மருத்துவர் பழனிவேல் |
| அ.சா.13 | பழனிசாமி |
| அ.சா.14 | மருத்துவர் குழந்தைவேல் |

| | |
|---|---|
| அ.சா.15 | வேலுச்சாமி |
| அ.சா.16 | அரசு மருத்துவர் ஹேமலதா |
| அ.சா.17 | சசிகலா, காவல் உதவி ஆய்வாளர், |
| அ.சா.18 | அரசு மருத்துவர் சிவானந்தம் |
| அ.சா.19 | மோகன்ராஜ் காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | 164 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அ.த.சா.ஆ.2 | – | 164 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அ.த.சா.ஆ.3 | – | 164 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அ.த.சா.ஆ.4 | – | 164 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அ.த.சா.ஆ.5 | – | 164 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அ.த.சா.ஆ.6 | – | 164 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அ.த.சா.ஆ.7 | – | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.8 | – | காயச்சான்று |
| அ.த.சா.ஆ.9 | – | பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.10 | – | காயச்சான்று |
| அ.த.சா.ஆ.11 | – | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.12 | – | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.13 | – | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.14 | – | புகார் |
| அ.த.சா.ஆ.15 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.16 | – | உடற்கூறாய்வு அறிக்கை |
| அ.த.சா.ஆ.17 | – | இறுதி கருத்துரை |
| அ.த.சா.ஆ.18 | – | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.19 | – | மாதிரி வரைபடம் |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.20 | – | கைப்பற்றுதல் மகஜர் (சா.பொ.5, 6) |
| அ.த.சா.ஆ.21 | – | கைப்பற்றுதல் மகஜர் (சா.பொ.1 முதல் 4) |
| அ.த.சா.ஆ.22 | – | படிவம் 91 |
| அ.த.சா.ஆ.23 | – | படிவம் 91 |
| அ.த.சா.ஆ.24 | – | சட்ட மாறுதல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.25 | – | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ.26 | – | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.த.சா.ஆ.27 | – | சட்ட மாறுதல் அறிக்கை |

**<u>சான்று பொருட்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | – | சுமார் 90 செ.மீ நீளமுள்ள கடப்பாறை |
| சா.பொ.2 | – | சவுக்கு கட்டை சுமார் 2 அடி |
| சா.பொ.3 | – | TN 28 AQ 0682 பதிவு எண் கொண்ட TVS XL SUPER இருசக்கர வாகனம் |
| சா.பொ.4 | – | அருவாள் – 1 (மொத்த நீளம் 31 செ.மீ மர கைப்பிடி 12 செ.மீ) |
| சா.பொ.5 | – | இரத்தம் படிந்த பச்சை நிற துண்டு |
| சா.பொ.6 | – | இரத்தம் படிந்த தென்னை ஓலை |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணம்</u>** : இல்லை.

GOPINATHAN S
Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 08.06.2026